**செ. கு. எண்**: 265 **நாள்**:28.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 28.7.2012

விழுப்புரம் மாவட்டம், அனந்தபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. பொ. ராஜேந்திரன் அவர்கள் 22.7.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் கன்னிகாபுரம் அருகே, திருச்சிராப்பள்ளி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், திருச்சிற்றம்பலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. வை. நாடிமுத்து அவர்கள் 23.7.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், நொளம்பூர் காவல் நிலைய குற்றப் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. எஸ். பழனிச்சாமி அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 27.7.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. பழனிச்சாமி, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. ராஜேந்திரன் மற்றும் திரு. நாடிமுத்து ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உடல்நலக் குறைவால் காலமான திரு. பழனிச்சாமி, சாலை விபத்தில் காலமான திரு. பொ. ராஜேந்திரன் மற்றும் மாரடைப்பால் காலமான திரு. நாடிமுத்து ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**